CENTRE FOR POLICY ALTERNATIVES

**கு.அ.உ.ச.உ சட்டத்தின் கீழான அண்மைய கைதுகள் தொடர்பான அறிக்கை & மாற்றுக் கருத்துகளுக்கு அருகிவரும் இடவெளி**

மத நல்லிணக்கத்தைக் காப்பாற்றுதல் என்ற போர்வையில் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் (கு.அ.உ.ச.உ) சட்டத்தின் கீழ் பேச்சுச் சுதந்திரத்தை முடக்குவதற்கு அண்மைக்கால நகர்வான, நகைச்சுவைப் பேச்சாளாரான நட்டாஷா எதிரிசூரிய அவர்களின் அண்மைய கைது தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆழ்ந்த கரிசனைகளைக் கொண்டுள்ளது. மத மற்றும் தேசிய நல்லிணக்கம், மற்றும் தேசிய பாதுகாப்பு என்பவற்றுக்கு ஓர் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விடயத்திற்காக ஆட்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கும் இந்த அண்மைக்காலக் கைது கு.அ.உ.ச.உ சட்டத்தின் கீழ் மட்டுமான கைதல்ல என்பதை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி) கவனத்தில் கொள்கிறது. திருவாட்டி. எதிரிசூரிய அவர்களின் நிகழ்வில் கலந்து கொண்டவர்களும் கூட விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் எனத் தெரிவிக்கும் ஊடக அறிக்கைகள், பேச்சுச் சுதந்திரத்திற்கு அருகிவரும் இடவெளியையும் இலங்கையில் மாற்று அபிப்பிராயங்கள் கொண்டிருத்தல் தொடர்பான அதிர்ச்சியான தாக்கம் பற்றிய ஆழ்ந்த கரிசனைகளையும் அதிகரிக்கிறது.

கு.அ.உ.ச.உ சட்டத்தின் பிரிவு 3 (1), *போரைப் பரப்புதலோ அல்லது பாரபட்சத்தை, எதிர்ப்பு உணர்ச்சியை அல்லது வன்முறையைத் தூண்டுவதாக அமையும் தேசிய, இன அல்லது மத ரீதியான பகைமையை ஆதரித்தல் என்பவற்றில் ஈடுபடும் ஆளெவரும் இச்சட்டத்தின் கீழ் தவரொன்றுக்கான குற்றவாளியாதல் வேண்டுமென ஏற்பாடளிக்கிறது.* அப்பேச்சுகள் தூண்டுதல், பாரபட்சம், எதிர்ப்புணர்வு அல்லது வன்முறையை ஏற்படுத்துவதற்குச் சமனானவையா என்ற எந்தத் தீவிர பரிசீலனையுமில்லாது - இந்த ஏற்பாட்டின் கீழ், இன மற்றும் மத நல்லிணக்கைத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது என்ற போர்வையின் கீழ் மேற்கொள்ளப்படும் கைதுகள் - உண்மையில், அரசியலமைப்பின் உறுப்புரை 14 மற்றும் குடியியல் மற்றும் அதே, அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச் பொருத்தனையின் உறுப்புரை 19 என்பவற்றினால் உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை உரிமை மற்றும் பேச்சுச் சுதந்திரம் என்பவற்றின் ஒரு மீறுதலாகும். ஓர் அசாதாரண நெருக்கடியான ஒரு சமயத்தில் கூடுதல் அழுத்தமான சமூக-பொருளாதாரப் பிரச்சினைகளிலிருந்தான ஒரு திசை திருப்பும் வகையில், சிறுபான்மைக் குழுக்களைச் சேர்ந்த தனிநபர்களைக் குறிவைப்பதற்கும், மாற்று அபிப்பிராயங்களின் குரல்களை நசுக்குவதற்கும், மற்றும் சுதந்திரமான பேச்சைக் குற்றமாக்குவதற்கும் இந்த சட்ட ஏற்பாடுகள் எவ்வாறு துஷ்பிரயோகிக்கப்பட்டு மற்றும் ஆயுதமாக்கப்படுகின்றன என்பதை மா.கொ.நி முன்னர் எடுத்துக் காட்டியுள்ளது.

மத நல்லிணக்கத்தைப் பாதுகாத்து நிலைநாட்டுவது கருதி புதிய சட்டங்களின் அறிமுகப்படுத்தலைச் சுட்டிக்காட்டும் ஊடக அறிக்கைகளையும் மா.கொ.நி கவனத்தில் கொள்கிறது. இவ்வாறான ஒரு அறிவித்தல், சட்டங்களின் ஒரு பற்றாக் குறையால் அல்ல, ஆனால் அச்சட்டங்களை முறையாக அமுல்படுத்தாத மற்றும் குற்றமிழைப்பவர்களை தூண்டுதல் மற்றும் வன்முறைக்குப் பொறுப்புக் கூறுபவர்களாக நிறுத்தாமையின் காரணமான உண்மையான சவாலுடன், சட்டங்கள் ஏராளமாக உள்ள ஒரு சூழ்நிலையில் விடுக்கப்பட்டதாக உள்ளது. ஆதாரங்கள் இருக்கின்ற போதிலும் சார்ந்துரைக்கப்படும் குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாத, இலங்கையின் அண்மைக் கால அனுபவங்களுடன் இது உறுதிப்படுத்தப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில், பொறுப்புக்கூறலை மேற்கொள்வதற்குப் பதிலாக, அரச பொறிமுறைகளுக்கு தூண்டுதலின் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களையே அதிகாரங்கள் நியமித்தமை, இலங்கையில் இனத் - தேசியவாதம் மற்றும் குற்றவிலக்களிப்பை மேலும் பலப்படுத்துகிறது. இவ்விதமான ஒரு பின்னணியில், அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி மற்றும் இலங்கையின் பலவீனமான சமாதானத்தைச் சிதைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு, மா.கொ.நி அதிகாரிகளை வலியுறுத்துகிறது.

Centre for Policy Alternatives (Guarantee) Limited | 6/5, Layards Road, Colombo 5, Sri Lanka
Tel: ++94112081384, +94112081385, +94112081386 | Fax: +9411 2081388 | Email: info@cpalanka.org | Web: www.cpalanka.org